
## கவிஞர் அஷோக் குமார்



கவிஞர் அசோக்குமார், இந்திய பாதுகாப்பு சேவையில், சில காலம் பணிபுரிந்து, பின்பு, சென்னை சுங்கத் துறையில் தன்னை இணைத்துக் கொண்டு தற்போது, கண்காணிப்பாளராக பணியாற்றுகிறார். இவர் ஓர் அற்புதமான படைப்பிலக்கிய வாதி. கவிதை, கட்டுரை, கதை என பன்முகத்தன்மையோடு உலா வருபவர். அவ்வபோது, எழுதிய கவிதைகள் பல உண்டு. முகநூலில் வேள்பாரி எனும் ஒரு தொடரை, வரலாற்றுப் பின்புலத்துடன் எழுதி வந்தார். கருத்தாழம் மிக்க, சொல்லாடலில் வல்லவர். ஈண்டு கீழே அவரது கவிதைகள் இடம் பெறுகின்றன. படித்துச் சுவையுங்கள். ஏனையப் படைப்புகளை இத்தளத்தின் வெவ்வேறு பக்கங்களில் அவற்றிற்கு உரிய இடங்களில் காணலாம்.

## மரணம்...

வயதானவர்கள்
மரணிக்கும்
இல்லங்களில்,
சாவுக்கும்
மரியாதை
கிடைப்பதில்லை!

வரவேண்டிய நேரத்தில்;
வராததால்,
இங்கு மரணம்
ஒரு நிகழ்வாகவே
இருக்கிறது!

இடம் காலியானது என
இல்லத்தாரும்;
கஷ்டப்படாமல் போனார் என,
உறவுகளும்;
கறிசோறு நிச்சயம் என
ஊராரும் இருக்க,
உறவினர்கள்
மீண்டும்
சந்தித்து
அளவளாவும்
சந்தர்ப்பமாய்
மட்டுமே அமைகிறது!

ரத்த உறவில்லாத
ஒருவர்
ஒரு துளி
கண்ணீர் சிந்துமாறு
வாழ்ந்திருந்தால்
ஒருவேளை
அந்த ஆத்மா
நிம்மதியடையலாம்..!



## மனிதர்கள் ...

நகர வாகனங்களின்
நெரிசல்களில்;
சிரமத்துடன் நகர்கிறது,
அபாய ஒலியுடன்
அவசர ஊர்தி!

மனதில்,
குழந்தைகளின்
முகங்களை ஏந்தி;
வாழ்வின் கடைசியில்,
நேரத்துடன் போராடும்
சக மனிதன் உள்ளே!
வாகனத்திற்கு வழிவிடாமல்,
முன்னேற முயல்கின்றனர்
சிலர்!

வாகனம் ஏற்படுத்தும்
பாதையில் பின்தொடர,
பரிதவிக்கின்றனர் சிலர்!
உள்ளம் துடிக்க,
உறவுகள் பதைக்க,
வீணாகும் நொடிகளில்;
நட்டநடுச் சாலையில்,
நிறைவேறாதக் கனவுகளுடன்;
பிரிந்து போகிறது, ஒருயிர்!

பொருளுக்காக;
மனிதர்கள்
அறம் கொன்று,
பிணம் தின்று,
வாழும் உலகில்;
மனிதத்தை
போதித்து மட்டும்
என்னாகப் போகிறது...!
29-08-2019